*(வலைபின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்*

---

*(1999, ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, மே மாதம் 28 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 19.00** **தபாற் செலவு : ரூபா 5.25**

[*1999 ஆந் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச. வ.–ஓ. 74/88*

## ***1972 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத் தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*முன்னுரை*

*தொழில் வாய்ப்பை உருவாக்கும், அத்துடன் இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கத்தின் சேமநல நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள், செயற்பாடுகள் என்பவற்றுக்குச் சுயமாக நிதி வசதியளிக்கும் நோக்கத்துக்காக, இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியிலும், பொருளாதார, நிதிச் செயற்பாடுகளில் சங்கமானது ஈடுபடுவதனை இயலச் செய்வதற்கு ஏற்பாடு செய்வது மற்றவற்க்கு இடையில் அவசியமாக வந்துள்ளதாதலாலும்:*

*அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் அந்நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட விசேட பொதுக்கூட்டங்களில் சமூகமளித்திருக்கின்ற உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்கின் மூலம், மேலேயுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்பாடு செய்வதற்கென இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்திற்கு அவசியமான திருத்தங்களைச் செய்யுமாறு வேண்டியுள்ளதாதலாலும் அத்துடன் அத்தகைய திருத்தங்களைச் செய்வது உசிதமானதாகவுள்ளதாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்*

***1.*** *இச்சட்டமானது, 1999 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1972 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—*

(அ) *அப்பிரிவின் உட்பிரிவு (9) ஐ அதற்கான உட்பிரிவு (15) என மீள இலக்கமிடுவதன் மூலமும் ;*

(ஆ) *அப்பிரிவின் உட்பிரிவு (10) ஐ நீக்கம் செய்வதன் மூலமும் ;*

(இ) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(9) தொழில்வாய்ப்பை உருவாக்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் சேமநல நிகழ்ச்சித் திட்டங்களுக்கும்,கருத் திட்டங்களுக்கும் நிதி வசதி அளிக்கும் நோக்கங்களுக்காக இலங்கைக்குள்ளும், இலங்கைக்கு வெளியேயும், பொருளாதார மற்றும் நிதிச் செயற்பாடுகளை மேம்படுத்தி, ஒழுங்குபடுத்தி, அவற்றில் ஈடுபடுதலும் அத்துடன் அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தலும்;

(10) சர்வோதயத் தத்துவத்துக்கிணங்க சமூகங்களின் அபிவிருத்திக்காக ஆன்மீக, ஒழுக்க, சமூக, கல்வி, பொருளாதார மற்றும் நிதிச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்பதற்குச் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட சமூக ஒழுங்கமைப்புக்களைத் தாபித்தலும், மேம்படுத்தலும், அத்தகைய ஒழுங்கமைப்புகளுக்குப் பயிற்சி, முகாமைத்துவ சேவைகள், நிதி உதவி என்பனவற்றை ஏற்பாடுசெய்வதன் மூலம் அவற்றின் அபிவிருத்திப் பணியை நிறைவேற்ற அவற்றிற்கு உதவியளித்தலும் ;

(11) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் முகாமை செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சட்டரீதியான அமைப்புகளைத் தாபித்தலும், அத்தகைய அமைப்புகளின் நடாத்துகையை ஆளும் விதிகளை வகுத்தமைத்தலும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நிர்வாகத் தத்துவங்களையும் நிதிசார் அதிகாரத்தையும் அத்தகைய அமைப்புகளுக்குக் கையளித்தலும் ;

(12) கூட்டுத்தாபனம் கொண்டு நடாத்துவதற்கு அல்லது ஈடுபடுவதற்கு விரும்பும் ஏதேனும் தொழிலை அல்லது கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டு நடாத்தும் அல்லது

அதில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பனியுடன் அல்லது தொழில் பொறுப்பு முயற்சியுடன் இலாபங்களைப் பகிர்தல், அக்கறைகளை ஒன்று சேர்த்தல், ஒத்துழைத்தல், கூட்டுமுயற்சி, பரஸ்பர சலுகை என்பவற்றுக்காக அல்லது வேறுவகையாக உடன்பாட்டொழுங்குகளைச் செய்து கொள்ளுதல்;

(13) சர்வோதய அகிம்சைமுறை மக்கள் அமைதி ஒழுங்கமைப்பு ஒன்றைத் தாபிப்பதனால் நேரடி நடவடிக்கை மூலமும்,அகிம்சை முறை இடையீடுகளில் பங்கு பற்றுவதன் மூலமும்,சமாதான ஊர்வலங்கள், சமாதான மாநாடுகள், சமாதானக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், சமாதானப் பாசறைகள் அல்லது வேறு செயற்பாடுகள் போன்ற அத்தகைய செயற்பாடுகளில் மறைமுகமாகப் பங்குபற்றுவதன் மூலமும் இலங்கையிலுள்ள பல்வேறு இனத்தொகுதிகளைச் சார்ந்த மக்களிடையே அமைதியை மேம்படுத்தல் ;

(14) மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் அவதானிக்கப்படுவதற்கான அனைத்துலக மதிப்பை மேம்படுத்துவதற்குப் பாடுபடுதலும், சர்வதேச மட்டத்திலும் முன்னேற்றகரமான வழிவகைகள் மூலம் அவை அனைத்துலகிலும் அங்கீகரிக்கப்பட்டு அவதானிக்கப்படுவதனை உறுதிப்படுத்தலும் ;

(ஈ) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (15) ஆம் உட்பிரிவில் "உணவு, கமத்தொழில் தாபனத்தின் பட்டினி ஒழிப்பு இயக்கத்தின்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "எவ்.ஏ.ஓ.,யூ.என்.வீ." ஆகிய சுருக்கங்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், " பதவி தாங்குநர்களையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதவிதாங்குநர் குழுவையும்" என்னும் சொற்களையிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அதன் பணிகளுள் எதனையும் ஒன்றோ பலவோவாய நிலையியற் குழுக்களுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் பணிகளுள் எதனையும் பதவிதாங்குநர் குழுவுக்கு அல்லது ஒன்றோ பலவோவாய நிலையியற் குழுக்களுக்கு" என்னும் சொற்களையிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு,அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் " கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றவையின் பதவிதாங்குநர்களினதும் ஏனைய உறுப்பினர்களினதும் கடமைகளைப் புரிவதற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்கும் குழுவினதும் நிறை வேற்றவையின் ஏனைய உறுப்பினர்களினதும் கடமைகளைப் புரிவதற்காகவும்,சர்வோதயத்தோடு தொடர்புபட்ட பொருளாதார தொழில் முயற்சிகளையும் சேமநலக் கூறுகளையும் தாபிப்பதற் காகவும், பதவிதாங்குநர் குழுவை அமைப்பதற்காகவும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை மாற்றீடு செய்தல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை உட்புகுத்தப்படுகின்றது :—

## *"அட்டவணை"*

### *முன்னுரை*

இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் வாய்மை,அகிம்சை, தன்னலமறுப்பு என்பனவே அச்சங்கத்தின் அடிக்கற்களாகவும் யாவரதும் நன்மையே-சர்வோதயமே-எம் எல்லோரினதும் முயற்சிகளின் குறிக்கோளாகவும் அமைந்துள்ள சர்வோதய சமூக அமைப்பு ஒன்றினை ஆக்கும் உயர்ந்த பணியில் எம் வாழ்வை அர்ப்பணித்துள்ள நாம், பரஸ்பர அன்பு, விசுவாசம், ஒத்துழைப்பு, சமபகிர்வு என்பன நிறைந்த குடும்பம் ஒன்றின் உறுப்பினராக இவ்விலட்சியத்தினை நோக்கி வினையாற்ற உறுதி கொண்டுள்ளோமாதலாலும், எங்கள் சேவை நிகழ்ச்சித் திட்டங்களில் திறமைத் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துக்காகவும் ஏனைய சமூக ஒழுங்கமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்காகவும், "இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கம்" என்னும் பெயருடன் பின்வரும் விதிகளின் கீழ் எம்மை ஓர் ஒழுங்கமைப்பாக அமைத்துக்கொள்கின்றோம்:-

### **இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கத்தின் விதிகள்**

**விதி 1- பெயர் :**

இக்கழகத்தின் பெயர் "இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கம்" என்பதாதல் வேண்டும். அது இதனகத்துப்பின்னர் சங்கம் எனக் குறிப்பிடு செய்யப்படுதல் வேண்டும்.

**விதி 2- சின்னம் :**

கழகத்தின் சின்னம்,உதயசூரியனைப் பின்னணியிற் கொண்ட மலர்ந்த இளஞ்சிவப்புத் தாமரை மலராதல் வேண்டும்.

**விதி 3- குறிக்கோள் வாசகம் :**

கழகத்தின் குறிக்கோள் வாசகம் "கிராமம் கிராமமாகச் சென்று எல்லோருக்கும் சேவை செய்வோமாக" என்பதாதல் வேண்டும்.

**விதி 4 - கொடி :**

கழகத்தின் கொடி கழகத்தின் சின்னத்தையும் குறிக்கோள் வாசகத்தையும் வெண்ணிறப் பின்னணியிற் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

**விதி 5- பொதுக் குறிக்கோள்கள் :**

கழகத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் :-

(1) கிராம அபிவிருத்தியிலும் சமுதாய நலத்திட்டங்களிலும் ஈடுபடத் தாமே முன்வரும் சிரமதானச் சேவகர்களும் சேவகிகளும் சர்வோதயத்தின் கொள்கைகள்,தத்துவம் மற்றும் குறிக்கோள்கள் என்பனவற்றை உணர்ந்துகொள்வதற்கெனச் சிரமதானப் பாசறைகள் மூலமும் ஆக்கமுறையான வேறு வழிகள் மூலமும் போதிய சந்தர்ப்பங்களையும் தகுந்த உளச் சூழ்நிலையையும் ஏற்பாடு செய்தல் ;

(2) நாட்டின் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள் பற்றியும் ஏனைய பிரச்சனைகள் பற்றியும் இளைஞர் சரியானபடி அறிந்துகொள்ள வாய்ப்புக்களை ஏற்படுத்தலும்சர்வோதயத் தத்துவத்தின் அடிப்படையில் இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைளைக் கற்பதற்கெனக் கல்விசார் மற்றும் பயிற்சித் திட்டங்கள் என்பனவற்றை உருவாக்குதலும் ;

(3) சாதி, இனம்,சமயம் அத்துடன் அரசியற்கட்சிப் பிரிவு என்பன போன்ற வேறுபாடுகளின் காரணமாகத் தோன்றும் அவநம்பிக்கையையும் சீர்குலைவையும் வேரறுக்கும் நோக்கத்துடன் செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்துதல் ;

(4) நாட்டு மக்களிடையே தன்னலமற்ற சேவை, தன்னலமறுப்பு,ஒத்துழைப்பு, தன்னடக்கம், தொழிலின் கௌரவம் ஆகிய பண்புகளைப் பரப்புதல் ;

(5) நாட்டு மக்களிடையே, குறிப்பாக இளைஞர்களிடையில் சமூக நீதி,சமத்துவம், தாய்நாட்டுப் பற்று அத்துடன் சர்வதேச சகோதரத்துவம் என்பன பற்றிய நல்ல சிறந்த கருத்துக்களை அபிவிருத்தி செய்தலை ஊக்குவித்தல் ;

(6) நாட்டுப்புற, நகர்ப்புற மனித சமுதாயங்களிடையில் தன்னம்பிக்கை, ஒத்துழைப்பு, ஐக்கியம் என்பனவற்றை அபிவிருத்தி செய்தலும், அவர்களின் ஆன்மீக, ஒழுக்க, சமூக, பொருளாதார அத்துடன் கல்வி வாழ்க்கையில் சகலவிதமான அபிவிருத்தியையும் ஏற்படுத்து வதற்கென அவர்களிடையே இயல்பாயமைந்த ஆற்றலைத் தூண்டுதலும் ;

(7) தேசிய இக்கட்டான சந்தர்ப்பங்களில் சமுதாய அபிவிருத்தி, சமுதாய நலத்திட்டங்கள் என்பவற்றில் தாமாக முன்வந்து சேவையாற்றத் தயாராகவிருக்கும் இளைஞர் தொகுதிகளைப் பயிற்றலும் ஒழுங்குபடுத்தலும் ;

(8) நேரம், விவேகம், வலு, செல்வம், திறனமைந்த ஆற்றல்கள், தொழில்நுட்ப அறிவு என்பன போன்றவற்றுள் எவை எல்லாவற்றையும் மக்கள் தமது சொந்த நல்லெண்ணத்துடன் நல்க விரும்புகிறார்களோ அவற்றுள் மிகக்கூடிய அளவிலானவற்றைத் திரட்டுதலும் ஒன்று சேர்த்தலும் அத்துடன் மக்களின் பொதுவான பொருளாதார, சமூக முன்னேற்றத்தைத் தோற்றுவிக்க அவற்றை அறிவியல் வழியிற் பயன்படுத்தலும் ;

(9) கழகத்தின் பொருளாதாரம் மற்றும் நிதிச் செயற்பாடுகளை ஊக்குவித்து ஒழுங்குபடுத்தி அவற்றில் ஈடுபடுதலும் அத்துடன் தொழில்வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கத்துக்காகவும் கழகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்கும்,செயற்பாடுகளுக்கும் நிதிவசதி அளிக்கும் நோக்கத்துக்காகவும், இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியேயும் அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதலும் ;

(10) சர்வோதயத் தத்துவத்துக்கிணங்க,சமுதாயங்களின் அபிவிருத்திக்காக ஆன்மீக, ஒழுக்க, சமூக, கல்வி, பொருளாதார மற்றும் நிதிச் செயற்பாடுகளைப் பொறுப்பு ஏற்பதற்குச் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட சமுதாய ஒழுங்கமைப்புக்களைத் தாபிப்பதனை ஊக்குவித்தலும் அத்துடன் அத்தகைய ஒழுங்கமைப்புகளுக்குப் பயிற்சி, முகாமைத்துவச் சேவைகள்,நிதி உதவி என்பவற்றை ஏற்பாடு செய்வதன் மூலம் அவற்றின் அபிவிருத்திப் பணியினை அவை நிறைவேற்ற உதவியளித்தலும் ;

(11) கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களினையும் கருத்திட்டங்களையும் முகாமை செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சட்டரீதியான அமைப்புக்களைத் தாபித்தலும், அத்தகைய அமைப்புகளின் நடாத்துகையை ஆளும் விதிகளை வகுத்தமைத்தலும், அத்தகைய அமைப்புகளுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நிர்வாகத் தத்துவங்களையும் நிதிசார் அதிகாரத்தையும் கையளித்தலும் ;

(12) கழகம் கொண்டு நடாத்துவதற்கு அல்லது ஈடுபடுவதற்கு விரும்பும் ஏதேனும் தொழிலை அல்லது கொடுக்கல் வாங்கலைக் கொண்டு நடாத்தும் அல்லது அதில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பனியுடன் அல்லது தொழில் பொறுப்பு முயற்சியுடன் இலாபங்களைப் பங்கிடுதல்,அக்கறைகளை, ஒன்றுசேர்த்தல், ஒத்துழைத்தல், கூட்டுமுயற்சி, பரஸ்பர சலுகை என்பவற்றுக்காக அல்லது வேறு வகையாக உடன் பாட்டொழுங்குகளைச் செய்து கொள்ளுதல்.

(13) சர்வோதய அகிம்சைமுறை மக்கள்அமைதி ஒழுங்கமைப்பொன்றைத் தாபிப்பதனால், நேரடியாகவும் அகிம்சை முறை இடையீடுகள், சமாதான ஊர்வலங்கள்,சமாதான மாநாடுகள், சமாதானக் கல்வி, நிகழ்ச்சித் திட்டங்கள், சமாதானப் பாசறைகள் அல்லது வேறு செயற்பாடுகளில் பங்குபற்றுவதன் மூலம் இலங்கையிலுள்ள பல்வேறு இன மக்களிடையே அமைதியை மேம்படுத்தல்;

(14) மனித உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் அவதானிக்கப்படுவதற்கான அனைத்துலக மதிப்பை மேம்படுத்துவதற்குப் பாடுபடுதலும், தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் முன்னேற்றகரமான வழிவகைகள் மூலம் அவை அனைத்துலகிலும் அங்கீகரிக்கப்பட்டு அவதானிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதலும் ;

(15) ஐக்கியநாடுகள் தாபனத்தின் பல்வேறு நிறுவனங்களின் குறிக்கோள்களைப் பொதுவில் எய்துவதற்கு ஒன்றுசேர்தலும் அத்துடன் குறிப்பாக ஐக்கிய நாடுகளின் உணவு கமத்தொழிற் தாபனம், ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாச்சாரத் தாபனம், ஐக்கிய நாடுகள் சர்வதேசச் சிறுவர் அவசரகால நிதியம், உலக சுகாதார ஒழுங்கமைப்பு, ஐக்கிய நாடுகள் சுற்றாடல் திட்டம், ஐக்கிய நாடுகளின் தொண்டர் திட்டம் ஆகியவற்றால் உலகத்திலிருந்து பட்டினி, கல்வியறிவின்மை மற்றும் நோய் என்பவற்றினை ஒழிப்பதற்கான திட்டங்களில் உதவிபுரிவதற்கு ஒன்று சேர்த்தலும்.

**விதி 6 - பொது நெறிகள் :**

கழக உறுப்பினர்கள் எந்த நெறிகளை எய்துவதற்கு முயலுவார்களோ அந்த நெறிகளாகப் பின்வரும் பத்து அடிப்படை நெறிகளையும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் :—

(1) வாய்மை,அகிம்சை மற்றும் தன்னலமறுப்பு என்பவற்றை எக்காலத்தும் கடைப்பிடித்தல் ;

(2) எளிய வாழ்க்கை முறையொன்றைப் படிப்படியாக எய்துதல் ;

(3) கழகத்தின் தூய்மையைப் பேணிக் காப்பதற்கெனக் கட்சி அரசியல் தொடர்புகளிலிருந்து விலகி நிற்றல் ;

(4) அரசாங்கத்தின் சமூகநலக் கருத்திட்டங்கள், தேசிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் என்பவற்றிற்கு உதவுதல் ;

(5) தனியார் செல்வச் சொத்தாண்மை,போட்டி மனப்பான்மை, வெறுப்பு, பேராசை என்பவற்றின் அடிப்படையிலமைந்த இக்கால வாழ்க்கை முறையை விடுத்து, சமுதாயச் சொத்தாண்மை, ஒத்துழைப்பு, அன்பு, தன்னலமறுப்பு என்பவற்றின் அடிப்படையிலான சர்வோதய சமூக ஒழுங்கினை அகிம்சை முறையில் உருவாக்க முயலுதல்;

(6) புத்தபகவான், யேசுபெருமான்,நபிகள் நாயகம் ஆகிய பெரும் உலகச் சமய மகான்களின் போதனைகளின் உதவிகொண்டும், அசோகச் சக்கரவர்த்தி, அநகாரிக தர்மபால, மகாத்மா காந்தி போன்ற உத்தமத் தலைவர்களால் எடுத்தோதப்பட்டதும், மெத்த(அன்பு), கருணை (கருணை),முதித்த (பேரின்பம்), உபேக்க (சாந்தம்), ஆகிய நிலைகளையும் தான(தானம்), பிரிய வசன (இன்சொல்),அர்த்த சரிய (நற்செயல்), சம்மானத்மத (சமய உறவு) ஆகிய நற்குணங்களையும் கொண்டதுமான சன்மார்க்கப் பாதையின் நடுவழி நின்று சொல்லப்பட்ட சர்வோதய இலக்கினை எய்துவதோடு இலங்கைத் தீவினை மீண்டும் தருமமும் செல்வமும் கொழிக்கும் நாடாக ஆக்குதல்;

(7) நேர்மையாகவும் தூய்மையாகவும் கழகத்தின் குறிக்கோள்கள் எய்தப்பட வேண்டுமென்பதனை ஏற்றுக் கொள்ளுதல்;

(8) கழக உறுப்பாண்மை தொடர்பான விடயங்களில் நிறைவேற்று அவை, முதியோர் அவை என்பவற்றின் முடிவுகளை ஏற்று ஒழுகுதலும் அத்தகைய உறுப்பினரை உறுப்பாண்மையிலிருந்து அகற்றுவதற்குச் சொல்லப்பட்ட பேரவைகள் முடிவுசெய்யின் அவ்வுறுப்பினர் தாமாகவே நீங்கிவிடுவார் என வாக்குறுதியளித்தலும் ;

(9) சமூகம்,ஒழுக்கம், அரசியல், பொருளாதாரம் என்பன தொடர்பான கருமங்கள் எவற்றிலும் முழுமையான அகிம்சை வழிப்புரட்சியை ஏற்படுத்துவதற்குச் சிரமதானம் முதற்படியாகும் என்பதனை உணர்தலும் அத்துடன் நீதியும் சமத்துவமும் நிரம்பியதும் எவ்வகையிலேனும் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையை அடியோடு அகற்றக்கூடியதுமான ஒரு சமூகமுறையினைத் தாபிப்பதற்கெனக் காலத்துக்குக் காலம் எடுக்கப்படும் ஏனைய சர்வோதய வழிகளிலும் முறைகளிலும் சேவை ஆற்றுதல் ; அத்துடன்

(10) நாடுகளில் எல்லோரதும் நலனுக்காக அறிவியல்,ஆன்மீகப் பெறுமானங்கள் இயைபுடன் இணைந்திருக்கும் தன்னம்பிக்கை கொண்ட நகர்புற, நாட்டுப்புற மக்கட் சமுதாயங்களாக மக்கள் அகிம்சை வழியில் ஒழுங்கமையுற்றிருக்கும் பொழுதும், அத்தகைய நாடுகளைக் கொண்டமைந்த உலக சமுதாயம், சமாதானம், ஒத்துழைப்பு அத்துடன் அத்தகைய சுதந்திர நாடுகளின் சுதந்திரத்துக்கான பரஸ்பர கௌரவம் என்பன முக்கிய அம்சங்களாகவுள்ள சுதந்தர தேசிய அரசுகளின் பொதுநலச் சேர்க்கையாக அவர்கள் ஒழுங்கமைவுறும் பொழுதும் தான் ஆகக்கூடிய நன்மையும், சந்தோசமும் எய்தப்படலாம் என்பதனை உணர்த்துவதற்கெனப் பணியாற்றல்.

**விதி 7- உறுதிமொழி :**

(1) கழகத்தின் உறுப்பாண்மைக்கு விண்ணப்பிக்கும் யாவரும் உறுப்பாண்மைக்குச் சேர்க்கப்படும் பொழுது பின்வரும் உறுதி மொழியினைக் கைக்கொள்ள இணங்கிக் கொள்ளுதல் வேண்டு மென்பதோடு,அத்தகைய எல்லா உறுப்பினர்களும் ஆண்டுப் பொதுக் கூட்டமொன்றிலும் ஒரே குழுவாக இவ்வுறுதிமொழியைப் புதுப்பித்துக் கொள்ள இணங்கிக் கொள்ளுதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், (123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வோதய சிரமதான சங்கம்/சர்வோதய சங்கம்/சர்வோதய சன்சதயவாக இருக்கும் கூட்டிணைப்பு உறுப்பினர் ஒருவரின் விடயத்தில், அத்தகைய உறுதிமொழி அத்தகைய சங்கத்தின்/சன்சதயவின் சார்பில் அத்தகைய சங்கத்தின்/சன்சதயவின் தலைவரினால்/பொதுச் செயலாளரினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(2) "கழகத்தில் எனது உறுப்பாண்மை தொடர்பிலும் ஒழுக்கம் தொடர்பிலும் ஆன எல்லாக் கருமங்களிலும் தன்னலமின்றிச் சேவையாற்றவும், நிறைவேற்றவையினதும் முதியோரவையினதும் முடிவுகளை இறுதியானவைகளாக ஏற்றமையவும் இத்தால் நான் வாக்குறுதியளிக்கின்றேன். மேலும் கழகத்தின் விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கிணங்க கழகத்தின் எனது உறுப்பாண்மை துறக்கச் செய்யப்பட்டால் அல்லது ஆள் எவரும் கழகத்தின் உறுப்பாண்மையிலிருந்து அகற்றப்பட்டால் அதனை எனக்கேற்பட்ட கேடாக அல்லது இழைக்கப்பட்ட நிந்தையாகக் கருதமாட்டேன் என வாக்குறுதியளிப்பதோடு பின்னர் ஒரு பொழுதில் உறுப்பாண்மையை மீளப்பெறுவதற்கு என்னைத் தகுதியுள்ளவனாக்கும் நோக்கோடு நான் எக்குறைபாடுகளுக்கும் மீறல்களுக்கும் பொறுப்பாளியாகவிருந்தேனோ அவற்றைச் சரிப்படுத்தவும் திருத்தவும் முயல்வேன்.

**விதி 8-உறுப்பாண்மை :**

(1) பதினாறு வயதுக்குட்படாதவரும் கழகத்தின் நெறிகளையும் குறிக்கோள்களையும் உறுதிமொழியையும் ஏற்று அவற்றைக் கடைப்பிடித்தொழுக இணங்குபருவமான ஆள் எவரும், உறுப்பாண் மைக்கு நிறைவேற்றவையினால் சேர்த்துக் கொள்ளப்படும்வரை, 20 ஆம் விதியில் கூறப்பட்ட ஏதேனும் மன்றத்தின் உறுப்பினராக முதலில் இருத்தல் வேண்டும்.

(1அ) (123ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சர்வோதய சிரமதான சங்கம்/ சர்வோதய சங்கம்/சர்வோதய சன்சதய, சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய சங்கம்/சன்சதய முடிவுறுத்தப்படக் கூடிய, குலைக்கப்படக்கூடிய அல்லது ஒடுக்கப்படக்கூடிய அத்தகைய காலம் வரை கூட்டிணைப்பு உறுப்பினர் ஒருவராக இருக்கலாம்.

(2) நிறைவேற்றவை 20 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட மன்றத்தின் உறுப்பினர் எவரையும் அல்லது நிறைவேற்றவையின் அபிப்பிராயப்படி இயக்கத்துக்கு அளப்பரிய சேவை ஆற்றியுள்ள ஆள் எவரையும் கழக உறுப்பினராக இருப்பதற்கு அழைப்பு விடுக்கத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான உறுப்பாண்மைக்கான விண்ணப்பமானது ஒப்பப் பணத்தொகையுடன் சேர்த்து பொதுச் செயலாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டதும், அத்தகைய விண்ணப்பகாரருக்கு உறுப்பாண்மை வழங்குவதனை நிறைவேற்றவை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

(4) கழகத்தின் நிறைவேற்றவைக் கழகத்தின் உறுப்பாண்மைக்குச் சேர்த்தல், உறுப்பாண்மை வழங்க மறுத்தல், உறுப்பாண்மையை இடைநிறுத்தி வைத்தல்,உறுப்பாண்மையிலிருந்து அகற்றல் என்பவற்றுக்கான முழுத்தத்துவமும் உடையதாதல் வேண்டும்.

(5) உறுப்பாண்மை சம்பந்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பிலான விடயங்களில் தனது செயல் பற்றிப் பொதுக் கூட்டத்துக்கோ வேறு யாதேனும் கட்சிக்கோ அல்லது ஆளுக்கோ காரணம் காட்டும் கடப்பாடு அற்றதாக நிறைவேற்றவை இருக்கவேண்டும் என்பதுடன், அது அத்தகைய முடிவுகளை, எவ்வாறாயினும் அங்கீகாரத்துக்கெனப் பொதுக் கூட்டத்தில் முன்வைத்தல் வேண்டும்.

(6) உறுப்பினர் ஏழு வகுதியாக அமைதல் வேண்டும். அவையாவன:-

வாலிப உறுப்பினர், சாதாரண உறுப்பினர், பொருள் வழங்கு உறுப்பினர்,ஆயுட்கால உறுப்பினர், கௌரவ உறுப்பினர், சர்வதேச உறுப்பினர், கூட்டிணைப்பு உறுப்பினர் என்பன.

“வாலிப உறுப்பினர்” என்பது,16 வயது முடிந்த ஆனால் 25 வயது முடிவுறாத ஆட்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

“சாதாரண உறுப்பினர்” என்பது, 25வயதுக்கு மேற்பட்ட ஆட்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

“பொருள் வழங்கு உறுப்பினர்” என்பது,9 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பாண்மைக் கட்டணத்தை அல்லது உறுப்பாண்மைக் கட்டணத்தை விடக் கூடுதலான ஏதேனும் உதவுதொகையை ஆண்டுதோறும் நன்கொடையளிக்கும் ஆட்கள் எனப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

"ஆயுட்கால உறுப்பினர்" என்பது, 9 ஆம் விதியில் அத்தகைய உறுப்பாண்மைக்கென விதித்துரைக்கப்பட்ட தொகையை ஒப்பப்பணமாகச் செலுத்தும் ஆட்கள் எனப் பொருற்படுதல் வேண்டும் ;

"கௌரவ உறுப்பினர்" என்பது, ஏதேனும் சமய குருமார் வரிசையைச் சேர்ந்தோராய் நிறைவேற்றவையின் அபிப்பிராயப்படி அவர்களின் ஆற்றல், மகிமை காரணமாக அத்தகைய உறுப்பாண்மைக்குத் தகைமை பெற்றவராயுள்ளவர்களான ஆட்கள் எனப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும் ;

"சர்வதேச உறுப்பினர்" என்பது, இலங்கையில் வதியாதோரா யிருந்தும் சர்வோதாய உளக் கொள்கைகளுக்குத் தமது பங்களிப்பைச் செய்தவர்களும் அத்துடன், சர்வோதய இயக்கத்துக்கு வெளிநாடுகளி லிருந்துது சேவைபுரிந்தோரும் அத்துடன், உறுப்பாண்மைக்குச் சேர்த்துக்கொள்ளவென நிறைவேற்றவையினால் தீர்மானிக்கப்படுள்ளோராயுமுள்ள ஆட்கள் எனப் பொருள்படுதல் வேண்டும் ;

"கூட்டிணைப்பு உறுப்பினர்கள்" என்பது (123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சர்வோதய சிரமதான சங்கம்/சர்வோதய சங்கங்கள்/சர்வோதய சன்சதயாக்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

**விதி 9 - உறுப்பாண்மைக் கட்டணங்கள்:**

(1) வாலிப உறுப்பினர் ஆண்டுக் கட்டணமாக ஆண்டுக்கு ஐந்து ரூபா செலுத்துதல் வேண்டும். சாதாரண உறுப்பினர் ஆண்டுக்கு உறுப்பினர் இருபத்தைந்து ரூபா செலுத்துதல் வேண்டும்.

(2) பொருள் வழங்கு உறுப்பினர் ஆண்டுக் கட்டணமாக ஐம்பது ரூபாவோ அல்லது ஐம்பது ரூபாவுக்கு மேற்பட்ட அவர்கள் விரும்பும் வேறு தொகையையோ செலுத்துதல் வேண்டும்.

(3) ஒரே தடவையில் ஆயிரம் ரூபா அல்லது ஒவ்வொன்றும் இருநூறு ரூபாப்படி ஐந்து தவணைகளில் செலுத்தும் உறுப்பினர் ஆயுட்கால உறுப்பினராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) கௌரவ உறுப்பினர்களும் சர்வதேச உறுப்பினர்களும் உறுப்பாண்மைக கட்டணம் செலுத்தக் கடப்பாடுமையவர் அல்லர்.

(4அ) கூட்டிணைப்பு உறுப்பினர்கள் ஆண்டுக் கட்டணமாக இருநூறு ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

(5) வாலிப, சாதாரண, பொருள்வழங்கு மற்றும் கூட்டிணைக்கப்பு வகுதியினரான உறுப்பினர்கள் ஒவ்வொரு புதிய பஞ்சாங்க ஆண்டுக்குமான தமது உறுப்பாண்மையை அத்தகைய ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டினதும் மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் உறுப்பாண்மைக் கட்டணத்தைச் செலுத்திப் புதுப்பித்தல் வேண்டும்.

(6) விலகுதவால் அல்லது வேறு ஏதேனும் வகையாக நிறைவேற்றவையின் முடி வொன்றினால் தமது உறுப்பாண்மையை இழக்கும் கழக உறுப்பினர்கள் அவர்களின் உறுப்பாண்மைக் காலத்தில் கழகத்துக்குச் செலுத்திய ஒப்பப்பணம் அல்லது நன்கொடை எதனையும் திரும்பத் தரும்படி கோருவதற்கான உரித்தைக் கொண்டிருத்தல் ஆகாது.

**விதி 10 - உறுப்பாண்மை இடாப்பு :**

பொதுச் செயலாளர் உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும் ; அதில், அவர்களின் பெயர்களும், உறுப்பாண்மையின் வகுதியும், நிரத்தர முகவரியும், உறுப்பாண்மை வழங்கப்பட்ட திகதியும், ஆளொருவர் உறுப்பினராயில்லாதொழிந்த திகதியம், பொதுச் செயலாளர் அவசியமெனக் கருதக்கூடியவாறான வேறேதேனும் இயைபான தகவலும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

**விதி 11 - முதியோர் அவை :**

(1) முதியோரவை கூட்டிணைப்பு உறுப்பினர்களாகவிராத இருபது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்கள் கழகத்தின் ஆண்டுப் பொதுதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

(2) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் உறுப்பினரின் முழுத்தொகையும் தேர்ந்தெடுக்கப்பட முடியாமை காரணமாக அல்லது ஆண்டின் பொழுது பதவிதுறத்தல் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் உறுப்பாண்மை முடிவுறுதல் காரணமாக முதியோரவையில் ஏற்படக்ண்டிய எவையனேும் வெற்றிடங்களை நிரப்ப நிறைவேற்றவை தத்துதுவமுடையாதல் வேண்டும்.

(3) உறுப்பினர் அல்லது பதவிதாங்குநர் தொடர்பான ஒழுக்காற்று விடயம் ஒந்றில் நிறைவேற்றவை ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருக்கின்ற சந்தர்பம் ஏற்பட்டால். அத்தகைய விடயம் முதியதேரவைக்கு முன்வைக்கப்படுதல் வேண்டும் என்பதோடு. அத்தகைய சந்தர்ப்பங்களில் முதியோரவையால் செய்யப்படும் முடிவு உறுப்பினர், நிறைவேற்றவை, பதவிதாங்குநர் என்போரால் முடிவானதாக ஏற்கப்படுதல் வேண்டும்.

(4) முதியோரவை உறுப்பினர் பதவிவழியாக நிறைவேற்றவையின் உறுப்பினரராகக் கருதப்படுவர், அவர்கள் நிறைவேற்றவையின் கூட்டங்களில் அந்த அவையின் ஏனைய உறுப்பினரைப் போன்று பங்குபற்றத் தத்துவமுடையோராதல் வேண்டும்.

(5) முதியோரவே உறுப்பினர், முதியோரவை தெரிவுசெய்யப்பட்ட ஒரு மாதத்ததுள் தம்முள்ளிருந்து (அ) தலைவரொருவர் (ஆ) செயலாளர் ஒருவர் என்போரை நியமித்துக்கொள்ளுதல் வேண்டும்.

(6) முதியோரவையில் எவரேனும் உறுப்பினர் தமது வராமை பற்றி எழுத்திற் காரணம் அறிவிக்காது நிறைவேற்றவையின் அடுத்துவரும் மூன்று கூட்டங்கக்கு வாராதிருந்து அத்துடன். அத்தகைய உறுப்பினர் அடுத்த கூட்டத்துக்குச் சமுகமாயிருக்கும்படி அவரைத் தேவைபடுத்திப் பொதுச் செயலாளரினால் விசேடமாக எழுத்தில் அறிவிக்கப்பட்டிருந்தும் வராதிருப்பின் அவர் முதியோரவையின் உறுப்பாண்மையை வறிதாக்கிவிட்டவராகக் கருதப்படுதல் வேண்டும்.

**விதி 12-நிறைவேற்றவை :**

(1) கழகம் நன்றாக இயங்குவதற்கும் அத்துடன் கழகத்தின் குறிக் கோள்களை எய்துவதற்கும் அவசியமானவையெனக் கருதப்படும் கொள்கை சார்பான முடிவுகளை எடுப்பதற்கும். பதவிதாங்குநர் குழுவினூடாக அத்தகைய முடிவுகளை வலியுறுத்துவதற்கு அவசியமான அத்தகைய எல்லா வழிமுறைகளையும் கையாளு வதற்கும் நிறைவேற்றவை தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) நிறைவேற்றவையானது முதியோரவையின் 20 உறுப்பினர்களையும், ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்படும் கூட்டிணைப்பு உறுப்பினர்களாக இராத 14 பதவிதாங்குநர்களையும், அதாவது தலைவரையும் 8 துணைத்தலைவர்களையும், பொதுச் செயலாளரையும் 3 மேலதிகச் செயலாளர்களையும், பொருளாளரையும் அத்துடன் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்படும் 41 ஏனைய நிறைவேற்றவை உறுப்பினர்களையும் கொண்டதாக 75 உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(3) நிறைவேற்றவையின் உறுப்பினர் ஒருவரின் உறுப்பாண்மையினை இடைநிறுத்தும்படி நிறைவேற்றவையின் 13 உறுப்பினர்களினால் கைப்பட விண்ணப்பம் செய்யப்படுவேதோடு அத்தகைய விண்ணப்பத்தை ஏற்க நிறைவேற்றவை முடிவுசெய்யுமிடத்து. உறுப்பினர் எவரதும் உறுப்பாண்மையை இடைநிறுத்தி வைக்கத தலைவர் தத்துவமுடையவராதல் வேண்டும் ;

(4) நிறைவேற்றவை மாதத்க்கு ஒருமுறையேனும் கூடுதல் வேண்டும் என்பதுடன், கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் 25 உறுப்பினர்கள் ஆதலும் வேண்டும் ;

(5) நிறைவேற்றவையின் அடுத்தடுத்து மூன்று கூட்டங்களுக்கு அவரது வரவியலாமையை எழுத்திலறிவியாது சமுகமளியதிருக்கும் நிறைவேற்றவைவ உறுப்பினர் எவரும் நிறைவேற்றவையில் தமது உறுப்பாண்மையை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(6) நிறைவேற்றவையின் உறுப்பினர் ஒருவராக இருக்க வேண்டும் எனத் தலைவர் கருதுபவரும், ஆனால் 12 (2) ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட சபை உறுப்பினர்களின தொகை காரணமாகச் சேர்த்துககொள்ளப்பட்ட முடியாதவருமான ஆள் எவரும், நிறைவேற்றவைக் கூட்டங்களில் பங்குபற்றவெனப் பொதுச் செயலாளருக்கூடாகத் தலைவரினால் அழைக்கப்படலாம். அத்தகைய ஆள் நிறைநேற்றவையின் செயற்பாடுகளில் பங்குபற்றப் பூரண தத்துவ முடையவராவார் ஆயின், வாக்களிக்க உரிமை உடையவராதலாகாது ;

(7) கழகத்தின் பதவிதாங்குநர் உட்பட நிறைவேற்றவை உறுப்பினர்கள் கௌரவத் தன்மையில் சேவை புரிகின்றவர்களாகவுற்றபோதும், அவர்களுக்குப் பொறுப்பிக்கப்பட்ட பொறுப்புடைமைசளைக கருததிற் கொண்டும் அவர்களது பணிகளின் முக்கிய தன்மையைக் கருத்திற்கொண்டும், அவர்களின் முழுநேரச் செவைகள் தலைமை அலுவலகத்தில் பெறப்படவேண்டுமெனத் தோன்றினால் நிறைவேற்றவை அவர்களுக்குப் பொருத்தமானவையும் போதுமானவையுமான படிகளை வழங்கத் தத்துவமுடையதாதல் வேண்டும் ;

**விதி 13-நிறைவேற்றவையின் தத்துவங்கள்:**

நிறைவேற்றவை கீழே குறிப்பிடப்பட்ட கடமைகளையும் பொறுப்புடைமையையும் நிறைவேற்றுவதற்காக அதன் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கும் அதிகாரம் உடையதாதல் வேண்டும் :-

(1) உறுப்பினர்களைச் சேர்த்தல், இடைநிறுத்தல் , விலக்கல் என்பன ;

(2) கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரை நியமித்தலும் அகற்றுதலும் ;

(3) நிறைவேற்றுப் பணிப்பாளரின் நிறைவேற்று உதவியாளர்கள், நிர்வாகச் செயலாளர், நிதிப்பணிப்பாளர், பிரிவுகளின் பணிப் பாளர்கள், வெளிக்களப் பணிப்பாளர்கள் முதலியோரை நியமித்தலும் அத்துடன் அவர்களுக்குக் கடமைகளைக் குறித்தொதுக்குதலும், அவர்களை அகற்றுதலும் ;

(4) இவ்விதிகளில் கூறப்படாத பதவிதாங்குநர் குழுவின் கடமைகளைக் குறித்துரைத்தலும் அவசியமானவாறான அத்தகைய தத்துவங்களை அவர்களுக்குக் கையளித்தலும் அத்துடன் அத்தகைய தத்துவங்களை மீளப்பெறுதலும் ;

(5) நிறைவேற்றவை, முதியோரவை என்பவற்றின் வெற்றிடங்களை நிரப்புதலும் அத்துடன் இதன்கீழான 14 ஆம் விதிக்கமையப் பதவிதாங்குநர் குழுவிலுள்ள வெற்றிடத்தை நிரப்புதலும் ;

(6) விசேட சேவைக்குழுக்கள், உபகுழுக்கள், செயற்குழுக்கள் என்பனவற்றை நியமித்தலும், கலைத்தலும், அத்தகைய குழுக்களுக்குத் தத்துவங்களையும் கடமைகளையும் கையளித்தலும், அத்துடன் அத்தகைய குழுக்களிடமிருந்து அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் மீளப்பெறுதலும் ;

(7) கழகத்தின் எல்லாக் கணக்குகளையும் பரிசோதனை செய்வதற்கெனவும் அத்துடன் பொதுக்கூட்டத்துக்கும் தேவையான அரசாங்க நிறுவனங்களுக்கும் அவர்களால் முறைப்படி கணக்காய்வு செய்யப்பட்டனவும் அத்தாட்சிப்படுத்தப்பட்டனவுமான ஆண்டுக் கணக்குக்கூற்றுக்களை முன்வைப்பதற்கெனவும் தகைமைபெற்ற கணக்காய்வாளரை நியமித்தலும் ;

(8) கழகத்தின் குறிக்கோள்களுக்கிணங்க வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தலும், அத்துடன் அவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பாகப் பதவிதாங்குநர் குழுவுக்கு அறிவுறுத்தல்களை வழங்கலும் ;

(9) விதிகளைப் பொருள் கொள்ளுதலும், தெளிவுபடுத்தலும், அத்துடன் இவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள்மீது முடிவுகளைச் செய்தலும் ;

(10) விதிகளுக்குத் திருத்தங்கள், மீளாய்வுகள் அல்லது நீக்கிவிடுதல்கள் என்பன அவசியமாகும்பொழுது, அத்தகைய கருமங்கள்மீது முடிவுசெய்து அத்தகைய நோக்கத்திற்கெனக் கூட்டப்படும் விசேட பொதுக்கூட்டத்தில் அவற்றை முன்வைத்தல் ;

(11) ஆண்டுப் பொதுக்கூட்டங்கள், விசேட பொதுக்கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றுக்கான திகதிகள், நேரங்கள், இடங்கள் என்பனவற்றை முடிவுசெய்தல் ;

(12) நிறைவேற்றவையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக, தனியான நிறுவனமாக, கருத்திட்டமாக அல்லது சேவையாகக் கழகத்தின் கட்டுப் பாட்டின்கீழும் முகாமையின்கீழும் அப்போதைக்கு இருக்கும் ஏதேனும் சர்வோதய நிறுவனத்தை, கருத்திட்டத்தை அல்லது சேவையைப் பவரவலாக்கலும், அத்தகைய நிறுவனத்தின், கருத்திட்டத்தின் அல்லது வேவையின் திறமையான பணியாற்று கைக்கவசியமான அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை அவற்றுக்குக் கைமாற்றுதலும் அத்துடன் அவற்றின் முகாமை, பேணுகை என்பன தொடர்பாக அல்லது வேறுவிதமான எல்லாத் தத்துவங்களையும் அவற்றுக்குக் கைமாற்றுதலும் ;

(13) கழகத்தினதும் அதன் ஊழியர்களினதும் நலனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக இலங்கை மத்திய வங்கியில் விசேட காப்புறுதி நிதியமொன்றைத் தாபித்தல் ;

(14) காலத்துக்குக்காலம் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குகளைக்கொண்டு –

(அ) இலங்கையிலும் சரி வெளிநாட்டிலும் சரி ஏதேனும் நிறுவனத் திடமிருந்து அல்லது எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் பணத்தொகையைத் திரட்டுதலும் அல்லது கடன் எடுத்தலும் அத்துடன் கழகத்தின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தின் ஈட்டின் பேரில் அல்லது பொறுப்பின் பேரில் அத்தகைய கடனுக்குப் பிணைப்பொறுப்பு ஏற்பாடு செய்தலும் ;

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பு உறுதிமூலம் அல்லது வேறு உத்தர வாதத்தின்மூலம் கழகத்தின் எவையேனும் கடன்பெறுகைகளை உறுதிப்படுத்தல் ;

(இ) வாக்குறுதிப்பத்திரங்கள், மாற்றுண்டியல்கள் அல்லது வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் முதலியவற்றை வரைதல், ஆக்குதல், ஏற்றல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், கழிப்பனவு செய்தல், அத்துடன் நிறைவேற்றுதல் ;

(ஈ) நிரந்தரமான, மீட்கப்படக்கூடிய அல்லது மீளச்செலுத்தப்படக் கூடிய தொகுதிக்கடன் முறிகளை அல்லது தொகுதிக்கடன் பங்குத் தொகுதிகளை வழங்குதல் ; அத்துடன்

(உ) ஏனையவகையைச் சார்ந்த அல்லது சமமான துணைப் பொறுப்புகளை அல்லது ஏனைய வகையைச் சார்ந்த அத்துடன் சமமான துணைப்பொறுப்புக்களை ஆக்குதல் அல்லது வழங்குதல்;

**விதி 14-பதவிதாங்குநர் குழு :**

*(1)* பின்வரும் பதினான்கு பதவிதாங்குநர்களைக் கழகத்தின் பதவிதாங்குநர்குழு உடையதாயிருத்தல் வேண்டும் :-

தலைவர் ;
துணைத் தலைவர்கள் எண்மர்;
பொதுச் செயலாளர் ;
மேலதிகச் செயலாளர்கள் மூவர் ; அத்துடன்
பொருளாளர்.

*(2)* பதவிதாங்குநர்கள், நிறைவேற்றவையில் கொள்கை சார்பாக முடிவுகளை நிறைவேற்றுப் பணிப்பாளரினூடாகவும் அவரது பணியாட்டொகுதிக்கூடாகவும் செயற்படுத்துதல் வேண்டும். பதவி தாங்குநர்கள் தமது எல்லா நடவடிக்கைகளுக்கும் கூட்டாகவும் தனித்தும் நிறைவேற்றவைக்குப் பொறுப்புடையோராதல் வேண்டும்.

*(3)* தலைவர், எட்டுத் துணைத்தலைவர்கள், பொதுச் செயலாளர் மூன்று மேலதிகச் செயலாளர்கள், பொருளாளர் என்போர் (1) உறுப் பாண்மையிலிருந்து அல்லது பதவியிலிருந்து விலகுமிடத்து, (2) இறக்குமிடத்து, (3) பித்தனாக அல்லது சித்தசுவாதீனமற்ற வராகவருமிடத்து, (4) குற்றவியல் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, (5) நிறை வேற்றவையின் உறுப்பினருள் 40 உறுப்பினரேனும் விலகும்படி எழுத்தில் வேண்டுமிடத்து, பதவி வகிக்காதொழிதல் வேண்டும்.

அத்தகைய சூழ்நிலைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிறைவேற்றவை நிரப்பத் தத்துவமுடையதாயிருத்தல் வேண்டு மென்பதுடன், அத்தகைய வெற்றிடம் நிரப்பப்பட்டதில் இருந்து இரண்டு பஞ்சாங்க மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்குள் கூட்டப்படும் விசேட பொதுக்கூட்டமொன்றில் அந்நியமனங்களை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

*(4)* ஏதேனும் காரணத்தினால் நிறைவேற்றவை செயற்பட முடியாததாக வரும் ஒரு நிலைமை எழுகின்றவிடத்து, பதவிதாங்குநர் குழு, முப்பது நாட்களுக்குள் விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படும்வரையும் அத்துடன் புதிய நிறைவேற்றவை தெரிவுசெய்யப்படும் வரையும் கழகத்தின் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்தும் பொறுப்பு கூட்டாக ஒப்படைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(5) (i) பதவிதாங்குநர்குழு மாதத்துக்கு ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும். இதற்குத் தலைவர் அல்லது அவர் வருகை தராதபோது துணைத்தலைவர்களில் ஒருவர் தலைமைதாங்குதல் வேண்டும்.

(ii) பதவிதாங்குநர் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், பொதுச்செயலாளரும், பொருளாளரும் உட்பட ஆறு பதவிதாங்குநர்களாதல் வேண்டும்.

(6) பொதுச்செயலாளர் அல்லது அவர் சார்பில் செயலாற்றுகின்ற அலுவலரொருவர் ஒவ்வொரு மாதமும் நிறைவேற்றவைக் கூட்டத்தில், பதவிதாங்குநர் குழுவினால் அம்மாதத்தின்போது எடுக்கப்பட்ட எவையேனும் பாரிய முடிவுகள் பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் நிறைவேற்றுப் பணிப்பாளர், ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அத்தகைய அவையின் கூட்டத்தில், கழகத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றுப் பணிப்பாளரினால் எம்முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுச் செயற்படுத்தப்பட்டதென்பதனைக் கூறுகின்ற அறிக்கை யொன்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

**விதி 15-பதவிதாங்குநர் குழுவின் தத்துவங்கள் :**

இவ்விதிகளில் வேறு எந்த இடத்திலும் குறிப்பிட செய்யப்பட்ட பதவிதாங்குநரின் தத்துவங்களுக்குப் பங்கமின்றி, பதவிதாங்குநர் குழு தானாகவோ அல்லது அத்தகைய முழுநேர சர்வோதயப் பணியாட்கள், அமைப்பாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலமாகவோ நிறைவேற்றவையின் சார்பிலும், நிறைவேற்றவையினால் வகுத்தமைக்கப்பட்ட கொள்கை சார்பான முடிவுகளுக்கமையவும், பின்வரும் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அதிகாரமுடையதாதல் வேண்டும் :-

(1) நிறைவேற்றவையின் உறுப்பினர்கள், பதவிதாங்குநர்கள் என்போர் தவிர்ந்த முழுநேர சர்வோதயப் பணியாட்கள் எல்லோரையும் நியமித்தல். அவர்களுக்குரிய கடமைகளைக் குறித்தொதுக்குதல், அத்துடன் அவர்களை அகற்றுதல் பற்றித் தலைவருக்கு ஆலோசனையளித்தல் ;

(2) அலுவலக மட்டம். நிறுவன மட்டம், கிராம மட்டம், பெரும்பாக மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டம் என்பவற்றிலான கடமைகளுக்கான அமைப்பாளர்களையும், பணியாட்களையும் நியமித்தல், அவர்களது கடமைகளைக் குறித்தொதுக்குதல், அவர்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் அவர்களை அகற்றுதல் ;

(3) அவசியமானபோது பணியாட்களினதும் அமைப்பாளர்களினதும் பரமரிப்புக்காகப் படி களையும் கொடுப்பனவுகளையும் அங்கீகரித்தல் ;

(4) சர்வோதய சிரமதானச் சங்கங்கள், சர்வோதய உழவர் மன்றங்கள், சர்வோதய பாலர் மன்றங்கள், சர்வோதய வணிகர் மன்றங்கள், சர்வோதய சிறுவர் மன்றங்கள், சர்வோதய தொழில் முன்சேவை, சர்வோதய சம்ம அஜீவ சேவை, சர்வோதய தேஷோதய சபை மற்றும் அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சர்வோதய ஒழுங்கமைப்புக்கள் என்பவற்றை ஒழுங்கமைத்தல், தாபித்தல், மேற்பார்வை செய்தல் என்பனவும் அவற்றுக்கான அமைப்பாளர்களையும் அத்தகைய அமைப்பாளர்களுக்கான அமைப்புக் குழுக்களையும் நியமித்தலும் அகற்றுதலும் ;

(5) கழகத்தின் தேவைகளுக்கிணங்க அமைச்சுகள், திணைக்களங்கள், வேறு அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் ;

(6) கழகத்தின் தேவைகளுக்கிணங்க அதையொத்த தேசிய வெளிநாட்டு ஒழுங்கமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணிவருதலும் ;

(7) சர்வோதய சிரமதான நிலையங்கள், பெரும்பாக நிலையங்கள், மாவட்ட நிலையங்கள், மாவட்ட அபிவிருத்திக் கல்வி நிறுவனங்கள், மத்திய ஒருங்கிணைப்பு நிலையம், சர்வோதயப் பண்ணைகள், வருவாய் பிறப்பிக்கும் நிறுவனங்கள், விசேட பயிற்சி நிலையங்கள், சமூக நலன்புரி மனைகள், கல்வி நிறுவனங்கள் என்பவற்றைச் தாபித்தல், கட்டுப்படுத்துதல், அத்துடன் நிறுத்துதல் ;

(8) கழகத்துக்குச் சொந்தமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எல்லாவற்றினதும் கட்டுக்காப்பு, கட்டுப்பாடு என்பவற்றைக் கொண்டிருத்தல், அவற்றைச் சரியாகப் பயன்படுத்துதல், அவற்றுக்கான சேர்க்கையும் சீராக்கமும் செய்தல் அத்துடன் இயலுமானபொழுது அவற்றிலிருந்து வருவாய் பெறுதல் என்பன ;

(9) கழகத்தின் பயன்பாட்டுக்கென நன்கொடைகளாக அல்லது அத்தகைய வேறுவகையாகக் காணிகள், கட்டடங்கள், சாதனங்கள் அல்லது நிதியங்கள் என்பவற்றைப் பெறுதலும் அத்துடன் கழகத்தின் குறிக்கோள்களின் நலனுக்காக அவற்றைப் பயன்படுத்துதலும் முதலீடு செய்தலும் ;

(10) கழகத்தின் ஆவணங்கள் எல்லாவற்றையும் பேணிவருதலும், சீரிய கட்டுக்காப்பில் வைத்திருத்தலும் ;

(11) கழகத்தின் வரவு செலவு பற்றிய முறையான கணக்குகளை பேணிவருதலும் சீரிய கட்டுக்காப்பில், வைத்திருத்தலும் ;

(12) கழகத்தின் மத்திய அலுவலகம், கிளை அலுவலகங்கள் என்பவற்றைத் தாபித்தல், கட்டுப்படுத்துதல், பேணிவருதல் என்பன ;

(13) சிரமதானப் பாசறைகள், சாந்தி சேனைப் பாசறைகள், ஆன்மீக சகோதரத்துவப் பாசறைகள், ஒழுக்கப் பாதுகாவல் பாசறைகள், சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள், சமூக நலன்புரித் திட்டங்கள் என்பனவற்றை அமைத்தலும் அவற்றுக்குப் பொறுப்பாக இருத்தலும் ;

(14) ஆலோசனை, சிரமதானம், சாதனம் அல்லது பணஉதவி என்ற வகையாகக் கழகத்திடமிருந்து உதவி நாடப்படும்பொழுது தனியாட்கள், குடும்பங்கள், தொகுதிகள், கிராமங்கள், நிறுவனங்கள் முதலியவற்றுக்கு உதவியளித்தல் ;

(15) கழகத்தின் நன்மைக்காகவும் நாட்டு மக்களின் நன்மைக்காகவும் கல்விச் சுற்றுலாக்கள், புலமைப்பரிசில்கள், பயிற்சிவசதிகள் என்பன இருக்கும்போது அவற்றை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பாடுசெய்து ஆதரிப்பதில் கழக உறுப்பினர்களுக்கு அருகதையுள்ள ஏனைய ஆட்களுக்கும் உதவிபுரிதல் ;

(16) சர்வதேச, தேசிய, மாவட்டப் பெரும்பாக, கிராம மற்றும நிறுவன மட்டங்களில் விரிவுறைகள், உரையாடல்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் ;

(17) சர்வோதயம் பற்றியும் அதனோடு சேர்ந்த விடயங்கள் பற்றியும் நூல்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், வேறு பிரசுரங்கள் என்பனவற்றை அச்சிடுதலும் வெளியிடுதலும் ;

(18) கழகத்தின் குறிக்கோள்கள், நெறிகள், நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஒத்துப்போகும், ஆனால் கட்சி சார்பான மற்றும் அதிகார அரசியற்செயற்பாடுகள் நீங்கலாக, இவ்விதிகளில் குறித்துரைக்கப் படாத ஏனைய சமூகப் புனரமைப்புச் செயற்பாடுகளில் பொதுவாகப் பங்குபற்றுதல் ;

(19) கழகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கெனப் பொருத்தமான வசதிகளைத் தாபித்தல் ;

(20) தலைவர் ;

(அ) தலைவர் -

(i) தாமே கழகத்தின் குறிக்கோள்களையும் நெறிகளையும் பின்பற்றிவரவேண்டியதோடு மற்றவர்களையும் பின்பற்றச் செய்தல் வேண்டும் ;

(ii) நிறைவேற்றவையின் முடிவுகளைப் பொதுக்கூட்டத்திற்கு முன்வைத்தல் வேண்டும் ;

(iii) கழகத்தின் எல்லா அலுவல்களையும் அத்துடன் நிறைவேற்றுப் பணிப்பாளரின் கடமைகளையும் மேற்பார்வைசெய்து நெறிப்படுத்திவறுதல் வேண்டும் ;

(iv) பொதுக்குழுவினதும் நிறைவேற்றவையினதும் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(ஆ) தலைவர் வருகைதராதபொழுது துணைத்தலைவர்களுள் ஒருவர், அத்துடன் தலைவர், துணைத்தலைவர் ஆகிய இருவரும் வராதிருக்கும்போது முதியோர் அவையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் பொதுக்குழுவினதும் நிறைவேற்றவையினதும் கூட்டங்களுக்குத் தலைமைதாங்கி நடாத்துதல் வேண்டும்.

(இ) தலைவர், பதவிதாங்குநர்குழுவினது ஆலோசனையின்மீது கழகத்தின் முழுநேரப் பணியாட்களை நியமித்தல், பதவியுயர்த்துதல், அவர்களின் சேவைகளை முடிவுறுத்தல், அவர்களை அகற்றுதல் அல்லது அவர்களுக்கெதிராக வேறுவகையாக நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(21) பொதுச்செயலாளர் : பொதுச்செயலாளர் கழகத்தின் பிரதான நிறைவேற்றலுவலர் ஆவார். நிறைவேற்றவையினால் அவருக்கு அளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் அவர் கொண்டிருத்தல் வேண்டும். அவரின் விசேட கடமைகள், பொதுக்குழுக் கூட்டங்களையும் நிறைவேற்றவைக் கூட்டங்களையும் கூட்டுதல், கழகத்தின் சார்பில் ஆவணங்களுக்கு ஒப்பமிடல், மேலதிகச் செயலாளர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட வேலைக்குப் பொறுப்பாயிருத்தல், பதவிதாங்குநர் குழுவுக்கும் நிறைவேற்றவைக்கும் அவசியமான நடவடிக்கைக்கென அறிவித்தல், கூட்டக் குறிப்புகள் வைத்துவருதல், கழகத்தினது பதிவேடுகளைப் பாதுகாத்து வருதல் என்பனவாதல் வேண்டும். பொதுச்செயலாளர் இல்லாதபோது, அவரது கடமைகளயும் பணிகளையும் புரிதலானது நிறைவேற்றவையின் கூட்டத்தில் தெரிவுசெய்யப்படும் நிறைவேற்ற வையின் வேறோர் உறுப்பினருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(22) பொருளாளர் : நிறைவேற்றவையினதும் பதவிதாங்குநர் குழுவினதும் பணிப்புகளுக்கு அமைவாகப் பொருளாளர், கழகத்தின் பணங்களைச் சேகரித்தல், சீரிய கட்டுக்காப்பில் வைத்திருத்தல், செலவிடுதல் என்பவற்றுக்குப் பொறுப்பாளியாதல் வேண்டும். பெறப்பட்டனவும் செலவிடப்பட்டனவுமான எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகளை அவர் பேணிவருதல் வேண்டும். பெறப்பட்டனவும் கையாளப்பட்டனவுமான எல்லாச் சாதனங்கள் பற்றிய பொருட்பதிவேடுகள், ஆவணங்கள் என்பவற்றை வைத்திருந்து வருதல் வேண்டும். அத்துடன் நிறைவேற்றவையும் பதவிதாங்குநர் குழுவும் அவ்விதம் கேட்கும்பொழுது அத்தகைய கணக்குப் புத்தகங்கள், பற்றுச்சீட்டுக்கள், ஆவணங்கள் என்பவற்றை அவற்றுக்குக் கிடைக்கக்கூடியனவாகச் செய்தலும் வேண்டும்.

(23) நிறைவேற்றுப் பணிப்பாளர் :

(அ) நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவரும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறைவேற்று உதவியாளர்களும், நிதிப் பணிப்பாளர் ஒருவரும், நிர்வாகச் செயலாளர் ஒருவரும். பல்வேறு பிரிவுகளுக்கும் வெளிக்கள வேலைக்குப் பொறுப்பாக இருப்பதற்கெனப் பணிப்பாளர்களும் நிறைவேற்றவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். நிறைவேற்றவையானது நிறைவேற்றுப் பணிப்பாளரது வேண்டுகோளின்பேரில் அவரது பணிகளையும் கடமைகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களை நியமிக்கலாம்.

(ஆ) நிறைவேற்றுப் பணிப்பாளர் நிறைவேற்றவையின் அங்கீகாரத்துக்கமைவாகப் பதவிதாங்குநர் குழுவினால் அவருக்கு அளிக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தலும் அவருக்குத் குறித்தொதுக்கப்படக்கூடிய அல்லது அவர்மீது சுமத்தப்படக்கூடிய அல்லது அவருக்குக் கையளிக்கப்படக்கூடிய அத்தகைய பணிகளையும் கடமைகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(இ) நிறைவேற்றுப் பணிப்பாளர் நிறைவேற்றவையினதும் பதவிதாங்குநர்குழுவினதும் எல்லா கூட்டங்களுக்கும் சமுகமளித்தல் வேண்டுமென்பதுடன், தவைவருக்கூடாகத் தமது நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் பதவிதாங்குநர் குழுவுக்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும்.

**விதி 16-பொதுக்கூட்டம்:**

(1) எல்லாப் பொதுக்கூட்டங்களும் எல்லா வகுதியினரான உறுப்பினர்களும் பங்குபற்றக்கூடியதாதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் எழுபத்தைந்து உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்.

(2) ஆண்டுப்பொதுக்கூட்டம் திசெம்பர் 31 ஆம் நாளுக்கு முன்னர் நிறைவேற்றவையால் தீர்மானிக்கப்படும் ஒரு திகதியில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) ஆண்டுப் பொதுக்கூட்டத்துக்கு உறுப்பினருக்கு ஆகக்குறைந்தது பதினான்கு நான் அறிவித்தலேனும் கொடுக்கப்படல் வேண்டும்.

(4) தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக ஆண்டுப் பொதுக்கூட்டத்தை நடாத்தமுடியாதவிடத்து, அத்தகைய ஆண்டுப் பொதுக்கூட்டம் எத்தேதிக்கு நிர்ணயிக்கப்பட்டதோ அத் தேதியிலிருந்து ஒரு மாதத்துக்கு மேற்படாத ஒரு திகதிக்கு அத்தகைய கூட்டத்தினைப் பின்போடுவதற்கு நிறைவேற்றவை தத்துவமுடையதாதல் வேண்டும்.

(5) பிரதான பதவிதாங்குநர், தலைவர், முதியோரவை, நிறைவேற்றவை என்பன ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(6) அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர்களால் முறைப்படி கணக்காய்வு செய்யப்பட்ட முற்போந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றைப் பொருளாளர் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் முன்வைத்தல் வேண்டும். அத்துடன் பொதுச்செயலாளர் முற்போந்த ஆண்டுக்கான ஆண்டுச்சேவை அறிக்கையையும் ஆண்டுப் பொதுக்கூட்டக் குறிப்புகளையும் நிறைவேற்றவையின் அங்கீகாரத்துடன் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் முன்வைத்தல் வேண்டும்.

(7) தவைவரின் பணிப்பின்மீது கல்லது முதியோரவையின் உறுப்பினரில் ஆகக்குறைந்தது பத்துப்பேரின் எழுத்திலான வேண்டுகோளின்மீது அல்லது நிறைவேற்றவை அத்தகைய கூட்டமொன்றைக் கூட்ட முடிவுசெய்யுமிடத்து அல்லது எழுபத்தைந்து உறுப்பினர் அல்லது சங்கத்தின் ஐந்திலொரு பங்கு உறுப்பினர் இவற்றுள் எது குறைந்ததோ அத்தொகை உறுப்பினர் எழுத்தில் வேண்டுகோள் விடுக்குமிடத்து அல்லது 14 (4) என்னும் விதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் பொதுச்செயலாளரால் விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படல் வேண்டும். அத்தகைய வேண்டுகோள் திகதிக்கும் அத்தகைய விசேட பொதுக்கூட்டம் கூடும் திகதிக்கும் இடையேயான காலஎல்லை ஒரு மாதத்துக்கு மேற்படலாகாது.

(8) பொதுக்கூட்டமொன்றுக்கு உறுப்பினர் முன்வைக்க விரும்பும் எவையேனும் தீர்மானங்கள் அத்தகைய கூட்டத்துக்குப் பதினான்கு நாட்களுக்கு முன்னரேனும் பொதுச் செயலாளரினூடாக நிறைவேற்றவைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். நிறைவேற்றவை அதற்கு அனுப்பிவைக்கப்பட்ட தீர்மானங்களுள் பொதுக்கூட்டத்தில் முன்வைக்கப்படுவதற்கென தெரிந்தெடுக்கப்பட்ட அத்தகைய தீர்மானங்கள்மீது முடிவுசெய்வதற்கான உரிமையை உடையதாதல் வேண்டும்.

(9) கழகத்தின் உறுப்பினர் இடையேயான சர்வோதயச் சமவாயம் கழகத்தின் செயற்பாடுகளின் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களும் பற்றி ஏகமானதான முடிவுகளைச் செய்வதாகவிருப்பினும், விசேட விடயங்களில் பெரும்பான்மை வாக்குப்படி முடிவுகள் செய்யப்படலாம். வாக்களிக்கும் உரிமை கௌரவ உறுப்பினர், ஆயுட்கால உறுப்பினர் என்போருக்கும் அத்தகைய பொதுக்கூட்டம் எத்திகதியில் நிகழ்கின்றதோ அத்திகதிவரை நிலுவையின்றித் தமது உறுப்பாண்மைக் கட்டணங்களைச் செலுத்திவிட்டோரான வாலிப உறுப்பினர், சாதாரண உறுப்பினர் அத்துடன் பொருள் வழங்கு உறுப்பினர் வகுதியினர்க்கும் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

**விதி 17-நிதிகளின் கட்டுப்பாடு :**

(1) ஒப்பப்பணக் கட்டணங்களாக, உள்நாட்டு அல்லது வெளிநாட்டுத் தனியார் நிறுவனங்கள், ஆட்கள் என்போரிடம் இருந்து கிடைக்கும் நன்கொடைகளாக, இலங்கை அரசாங்கத்திடமிருந்து அல்லது வெளிநாட்டு அரசாங்கத்திடம் இருந்து அல்லது நிறுவனத்திடம் இருந்து பெறப்படும் மானியக் கொடைகளாகவும் நன்கொடைகளாகவும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு மூலம் எதனிலிருந்தேனும் பெறப்பட்ட கடனாக அத்துடன் கழகத்தின் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களிலிருந்து பெறப்படும் வருமானமாகவும் கழகத்தால் பெறப்படும் பணங்கள் கழகத்தின் நிதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய எல்லாப் பணங்களையும் பெறுதல், அவற்றின் கட்டுக்காப்பு, அவற்றைச் செலவிடுதல் என்பவற்றுக்கான பொறுப்பு நிறைவேற்றவையினதும் பதவிதாங்குநர் குழுவினதும் பணிப்புகளின் கீழ் பொருளாளருக்குரித்தாக்கப்படல் வேண்டும்.

(3) கழகத்தினால் பெறப்படும் எல்லாப் பணங்களும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் அல்லது வங்கிகளில் அல்லது நிறைவேற்றவையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேமிப்புக் கணக்கில், நிலையான வைப்பில், காப்புறுதிக் கம்பனியில், நிதிக்கம்பனியில் அல்லது வேறு நிதிநிறுவனத்தில் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதானச் சங்கத்தின் சார்பில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். அத்தகைய பணங்களை மீளப்பெறுவதற்கான காசோலைகள் அல்லது வேறு சாதனங்கள்

பின்வருவோரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் :-

(i) தலைவர் அத்துடன் பொருளாளர் அல்லது நிதிப் பணிப்பாளர் ;

(ii) தலைவர் அத்துடன் துணைத்தலைவர்களுள் எவரேனும் ஒருவர் அல்லது பொதுச்செயலாளர் ; அல்லது

(iii) பொருளாளரும் அல்லது நிதிப்பணிப்பாளரும், அத்துடன் துணைத்தலைவர்களுற் எவரேனும் ஒருவர் அல்லது பொதுச்செயலாளர் ; அல்லது

(iv) நிறைவேற்றுப் பணிப்பாளரும் அத்துடன் தவைர், பொருளாளர் பொதுச்செயலாளர், நிதிப்பணிப்பாளர், என்போருள் எவரேனும் ஒருவர் :

ஆயின், எவ்வாறாயினும், கழகமானது தோதான அதிகாரியினது அங்கீகாரத்துடன், வெளிநாட்டு நாணயத்தில், வரைவு உண்டியல்களில், தபால் வரைவுமாற்றீட்டில், தந்தி வரைவு மாற்றீட்டில் அல்லது வேறு வகையான வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட ஏதேனும் பணத்தை வதிவற்ற வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் வங்கியில் வப்பிலிடலாம்

ஆயின், மேலும் அத்தகைய ஏதேனும் வங்கி, காப்புறுதிக் கம்பனி, நிதிக்கம்பனி அல்லது வேறு நிதிநிறுவனம் என்பவற்றிலிருந்து அத்தகைய வங்கி, காப்புறுதிக் கம்பனி, நிதிக் கம்பனி அல்லது வேறு நிதிநிறுவனம் என்பவற்றின் வேறு ஏதேனும் வங்கி, காப்புறுதிக் கம்பனி. நிதிக்கம்பனி அல்லது வேறு நிறுவனம் என்பவற்றுக்கு எவையேனும் பணத்தொகைகளை மாற்றும் அவசியம்பற்றிப் பொருளாளர் அல்லது நிதிப்பணிப்பாளர் அறிக்கையிடுகின்றவிடத்து, நிறைவேற்றவை அத்தகைய மாற்றத்துக்கு அதிகாரமளிப்பதற்கும் காசோலைகளில் அல்லது வேறு சாதனங்களில் கையொப்பமிட ஆட்களைப் பெயர்குறித்து நியமிப்பதற்கும் அத்தகைய பணங்களை வைப்பிலிடுதல் தொடர்பான கட்டளைகளை வழங்குவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(4) மத்திய அலுவலகத்திற்கு வெளியேயுள்ள செயற்பாடுகளுக்காக, அத்தகைய தேவை எழும்போதெல்லாம், கழகத்தினால் பேணப்படும் கணக்குகளின் விடயத்தில் காசோலைகளில் கையொப்ப மிடுவதற்கெனப் பொறுப்புவாய்ந்த ஆட்களை நியமிப்பதற்கு நிறைவேற்றவை தத்துவமுடையதாதல் வேண்டும்.

(5) நிறைவேற்றவை, மாவட்டங்களில் நிறைவேற்றப்படும் கருத்திட்டங்களில் கணக்குகளைக் கணக்காய்வு செய்யும் தேவை ஏற்படும் போதெல்லாம் கணக்காய்வு செய்வதற்கென அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் கணக்காய்வாளர்களை நியமிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(6) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பொருளாளர் நிறைவேற்றவையின் ஒருப்பாட்டுடன் கணக்காய்வாளர்களினால் உரிய முறையில் கணக்காய்வு செய்யப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட கணக்குக்கூற்றை முன்வைத்தல் வேண்டும் ; அத்துடன் ஆண்டுப் பொதுக்கூட்டமானது கணக்குக்கூற்றையும் ஆராய்ந்து பார்க்கவென மூவரைக் கொண்ட குழுவொன்றை நியமித்தல் வேண்டும். சொல்லப்பட்ட குழு பொருளாளருக்கூடாகச் சொல்லப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஆண்டுக் கணக்குக் கூற்றுக்கள் என்பன தொடர்பிலான இயைபான சகல தகவல்களையும் பெறுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட ஆண்டுப் பொதுக்கூட்டத் தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக அவசிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கென அது பற்றிய அதன் விதப்புரைகளை நிறைவேற்றவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விதி 18-கிளைச்சங்கங்கள் :**

(1) ஏதேனும் வகுதியைச் சேர்ந்த ஆகக்குறைந்த ஐந்து உறுப்பினரேனும் உள்ள எவ்விடத்திலேனும் கிளைச்சங்கமொன்றை அமைப்பதற்கு அதிகாரமளிப்பதற்கு நிறைவேற்றவை தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) கிளைச்சங்கங்கள் கழகத்தின் குறிக்கோள்கள், நெறிகள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கிணங்கப் பணியாற்றல் வேண்டும்.

(3) கிளைச்சங்கங்களுக்குத் தத்துவங்களைக் கையளிக்கவும், அத்துடன் அவற்றைக் கட்டுப்படுத்தவும், கலைக்கவும் விதிகளை வகுத்தமைப் பதற்கு நிறைவேற்றவை தத்துவமுடையதாதல் வேண்டும்.

**விதி 19-அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள் :**

(1) கட்சி, அரசியற் பந்தங்களற்ற தன்னிச்சையான ஏதேனும் ஒழுங்கமைப்பு, கழகத்தின் பொதுக் குறிக்கோள்களுக்கு இசைய நிறைவேற்றுக்கழகத்துக்கு விண்ணப்பித்தால். அத்தகைய வேண்டுகோளை ஏற்பதற்கும் கழகத்தினை அங்கீகரிக்கப்பட்ட குழுக்களாக அவற்றைப் பதிவுசெய்வதற்கும் அல்லது வேண்டுகளை நிராகரிப்பதற்கும் அல்லது பதிவின் பின்னர் அத்தகைய அங்கீகரிப்பை இல்லாதாக்குவதற்கும் நிறைவேற்றவை தத்துவ முடையதாதல் வேண்டும்.

(2) அத்தகைய குழுவை அங்கீகரித்தல், அக்குழுவினது அல்லது கழகத்தினது தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் எவ்வழியிலும் பாதித்தல் ஆகாது.

(3) கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பாகப் பதிவுசெய்யப்பட்டிருத்தலை ஒரு பக்கச் செயலாக இல்லாததாக்கிக் கொள்ளத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

**விதி 20-சர்வோதய மன்றங்கள் :**

(1) சமுதாயத்தின் பல்வேறு துறையினரிடையேயும் சர்வோதயக் கருத்தைப் பரப்பவும், கழகத்தின் செயற்பாடுகளில் அவர்களைப் பங்குகொள்ளச் செய்யவும், சர்வோதய மன்றங்களை அமைக்கவும், நெறிப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் பதவிதாங்குநர்குழு தத்துவ முடையதாதல் வேண்டும்.

(2) இம்மன்றங்கள் சர்வோதய உழவர் மன்றங்கள், சர்வோதயப் பாலர் மன்றங்கள், சர்வோதய ஆசிரியர் மன்றங்கள், சர்வோதய மகளிர் மன்றங்கள், சர்வோதய வணிகர் மன்றங்கள், சர்வோதய சிறுவர் மன்றங்கள், சர்வோதயத் தொழில்முன் சேவை என்பனவாக அறியப்படலாம்.

**விதி 21-வழக்குத் தொடர்வதற்கும் தொடரப்படுவதற்குமான தத்துவம் :**

வழக்குத் தொடரவும் அதற்கெதிராக வழக்குத் தொடரப்படவும் கழகம் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய நிலையில் தலைவரும் பொதுச் செயலாளரும் கழகத்தின் சார்பில் தோன்றுவதற்கு அவசியமான எல்லாத் தத்துவங்களையுமுடையோராக இருத்தல் வேண்டுமென்பதுடன், நிறைவேற்ற வையின் ஒருப்பாட்டோடு அத்தகைய தத்துவங்களை நிறைவேற்றவையின் வேறு உறுப்பினர் ஒருவருக்குக் கையளிப்பதற்கும் தத்துவமுடையோராதலும் வேண்டும்.

**விதி 22-சர்வோதய மாநாடு :**

மூன்றாண்டுக்கு ஒருமுறையாவது அனைத்திலங்கைச் சர்வோதய மாநாடு ஒன்றினை நிறைவேற்றவை ஒழுங்குசெய்தல் வேண்டும். அதற்குக் கழகத்தின் உறுப்பினர்கள், கிளைச்சங்க உறுப்பினர்கள், அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வோதய மன்றங்களின் உறுப்பினர், ஏனைய தேசிய, சர்வதேச ஒழுங்கமைப்புகளிலிருந்து விருந்தினர் ஆகியோர் பங்குபற்ற வரவழைக்கப்படுதல் வேண்டும்.

**விதி 23-பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் :**

(1) கழகத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் எவ்விடத்திலாதல் வேண்டும் என நிறைவேற்றவை முடிவுசெய்தல் வேண்டும்.

(2) கழகத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், வழமையாகக் கொழும்பு மாவட்டத்தில் அமைதல் வேண்டும். ஆனால், நிறைவேற்றவையின் முடிவொன்றின்மூலம் இலங்கையிலுள்ள வேறு எம்மாவட்டத்திற்கும் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை இடமாற்றுவதற்கான தத்துவத்தை நிறைவேற்றவை தனக்கொதுக்குதல் வேண்டும்.

**விதி 24-விதிகளுக்கான திருத்தங்கள்:**

*(1)* கழகத்தின் விதிகள், அந்நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட விசேட பொதுக்கூட்டம் ஒன்றிலும் உத்தேசத் திருத்தத்துக்குச் சாதகமாகச் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரு பங்கினரின் வாக்கின்மீதும் அன்றி, மீளாயப்படவோ, நீக்கப்படவோ, திருத்தப்படவோ கூடாது.

*(2)* உத்தேச மீளாய்தல்கள், திருந்தங்கள் அத்துடன் நீக்கங்கள் பற்றியஎழுத்திலான அறிவித்தல் பொதுச் செயலாளர்மூலம் நிறைவேற்றவைக்கு அனுப்பப்படல் வேண்டும். நிறைவேற்றவை, சமுகமாயிருக்கும் பெரும்பான்மை உறுப்பினரின் வாக்கினால் அத்தகைய விசேட பொதுக்கூட்டத்தின் அங்கீகாரத்துக்கென முன்வைக்கப்படவேண்டிய மீளாய்தல்கள், திருத்தங்கள், நீக்கங்கள் என்பவற்றை முடிவுசெய்தல் வேண்டும்.

*(3)* நிறைவேற்றவையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இவ்விதிகளுக்கான மீளாய்தல்கள், திருத்தங்கள், நீக்கங்கள் என்பன விசேட பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளராலும், அவர் வராதபோது அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைவகிக்கும் ஆளினாலும் முன்மொழியப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.